**ஜூன்– 08**

# TNPSC துளிகள்

- 1930ம் ஆண்டு ஜூன் 1ம் தேதி மகாராஷ்டிராவின் இரண்டு முக்கிய நகரங்களான அப்போதைய பம்பாய்க்கும் புனேவுக்கும் இடையே அறிமுகப்படுத்தப்பட்ட முதல் சொகுசு ரயில் வண்டியான டெக்கான் குயின் (Deccan Queen) 88 வருடங்கள் சேவையை நிறைவு செய்துள்ளது.
- ராஷ்டிரபதிபவனில் கவர்னர்கள் மற்றும் துணை நிலை கவர்னர்களின் இரண்டு நாள் மாநாடு நடத்தப்பட்டது. ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தால் தலைமை தாங்கப்படும் இம்மாநாடு இது போன்ற வகையில் 49வது மாநாடு ஆகும்.
- சாகோத்ராவில் சிக்கித் தவிக்கும் 38 இந்திய மக்களை மீட்பதற்காக இந்திய கடற்படை ஆபரேஷன் நிஷ்தார் (NISTAR) என்ற நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. தற்சமயம் ஏடன் வளைகுடாவில் பணிக்காக அனுப்பப்பட்டுள்ள இந்திய கடற்படை கப்பல் சுனன்யா மேகேனு என்ற சூறாவளிக்குப் பிறகு ஏமன் தீவுகளில் ஒன்றான சாகோத்ராவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.
- நிதித் தலைநகரத்தை நிதி தொழில்நுட்ப மையமாக மாற்றும் தனது முயற்சிகளுக்காக மகாராஷ்டிரா அரசு ஸ்டார்அப் நிறுவனங்களை ஊக்குவித்தலுக்காக சாண்ட்பாக்ஸ் (Sandbox) என்ற திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## நெகிழியைத் தடை செய்ய தமிழ்நாடு முடிவு


- உலக சுற்றுச்சூழல் தினத்தன்று, தமிழக முதல்வர் எடப்பாடி K.பழனிச்சாமி 2019ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நெகிழியின் (Plastic) பயன்பாட்டை தடை செய்யும் விதமாக நெகிழி இல்லா தமிழ்நாடு கொள்கை (Plastic Free Tamilnadu Policy) என்ற ஒன்றை அறிவித்துள்ளார்.
- முன்பு, முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதா, 2002ம் ஆண்டு நெகிழிப் பொருட்கள் (விற்பனை, சேமிப்பு, பயன்பாடு மற்றும் இடமாற்றம் ஆகியவற்றை தடை செய்தல்) மசோதாவை அறிமுகப்படுத்தி, அதன் தொடர்ச்சியாக ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழுவின் பரிந்துரைகள் தற்சமயம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

# தேசியச் செய்திகள்

## பிஜிலி பில் மாபி யோஜனா 2018

- தொழிலாளர்களுக்கும் ஏழைக் குடும்பங்களுக்கும் நிலுவையிலிருக்கும் தொகையை ரத்துச் செய்யும் திட்டத்திற்கான மசோதாவான பிஜிலி பில் மாபி யோஜனாவிற்கு (2018) முதல்வர் சிவராஜ் சிங் சௌஹான் தலைமையிலான மாநில அமைச்சரவை ஒப்புதலளித்துள்ளது.
- மாநில அமைச்சரவைக் கூட்டத்தில் மானிய விலையில் மின்சாரமளிக்கும் திட்டமான முக்கிய மந்திரி ஜன கல்யாண் (சம்பல்) யோஜனாவிற்கும் ஒப்புதலளிக்கப்பட்டது.

- இந்த மானியமளிக்கப்பட்ட மின்சாரத் திட்டத்தின் கீழ், அமைப்பு சாராத பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள குடும்பங்கள் மாதம் 200 ரூபாய் என்ற கட்டணத்தில் மின் வசதி அளிக்கப்படுவர்.




- முக்கிய மந்திரி ஜன கல்யாண் (சம்பல்) யோஜனாவின் கீழ் பயனாளிகளுக்கு மின் இணைப்புத் திட்டம் இலவசமாக ஏற்படுத்தித் தரப்படும்.

## ஐக்கிய நாடுகள் குளோபல் காம்பாக்ட் நெட்வொர்க் இந்தியா மாநாடு

- நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் உள்ளூர் பிணையமான குளோபல் காம்பாக்ட் நெட்வொர்க் இந்தியா (Global Compact Network India - GCNI) நிறுவனம், பெங்களூருவில் நீடித்த வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals - SDGs) என்ற கருத்துருவில் தமது 13வது தேசிய மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கின்றது.





- இந்த வருடம் ஐக்கிய நாடுகள் இந்திய வியாபார அமைப்புடன் (UN India Business Forum) ஒன்றிப் போகும் வகையில் இந்த GCNI மாநாடு ஒரு முக்கியத்துவம் பெற்றதாகும்.
- பிஈஎம்எல்லின் (BEML) CMDயான D.K.ஹோபி இம்மாநாட்டின் தலைவர். மேலும் ஒஎன்ஜிசியின் (ONGC) CMDயான சசி சங்கர் இதன் தலைமையதிகாரி ஆவார்.

## ஜன்அவுசாதி சுவிதா

- மத்திய இரசாயன மற்றும் உரத்துறைக்கான இணையமைச்சர் மன்சுக் எல் மண்டவியா, டெல்லியில் பிரதான் மந்திரி பாரதீய ஜன்அவுசாதி பரியோஜன

திட்டத்தின் கீழ் உயிரியல் ரீதியாக மக்கிப் போகக் கூடிய (biodegradable) மாதவிடாய் அட்டைகளான (Sanitary Napkins) ஜன்அவுசாதி சுவிதா (Janaushadhi Suvidha) என்ற பொருட்களை வெளியிட்டுள்ளார்.




- ❖ இந்த தயாரிப்பு ஆக்சிஜன் இருக்கும் வெளியில் தொடர்புகொள்ளும் போது உயிரியல் ரீதியாக மக்கும் தன்மை கொண்ட வகையில் சிறப்பான கூடுதல் அம்சத்தோடு வெளி வந்துள்ளது.
- ❖ தேசிய குடும்ப நல அறிக்கை 2015-16ன் படி (National Family Health Survey – 2015/16) 15 வயது முதல் 24 வரையிலான 58 சதவீத பெண்கள் உள்ளூரிலேயே தயாரிக்கப்பட்ட அட்டைகள், மாதவிடாய் அட்டைகள் மற்றும் துணிகளை பயன்படுத்துகின்றனர்.

***பின்னணி***

- ❖ ஜன்அவுசாதி என்பது 2008ம் வருடம் அனைவருக்கும் மலிவான விலையில் தரமான மருந்துப் பொருட்களை அளிப்பதற்காக மத்திய அரசால் ஆரம்பிக்கப்பட்டத் திட்டமாகும்.
- ❖ இந்த திட்டம் நாடு முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் உள்ள ஜன்அவுசாதி மருந்து நிலையங்களில் உள்ள சிறப்பு கடைகளின் வழியாக காப்புரிமை இல்லாத மருந்துகளை (Generic Medicines) விற்பதற்கான திட்டம் என்ற வகையில் ஆரம்பிக்கப்பட்டதாகும்.
- ❖ முதல் ஜன்அவுசாதி மருந்து நிலையம் 2008ம் ஆண்டு நவம்பர் 25ம் தேதி பஞ்சாபில் உள்ள அமிர்தசரஸில் ஆரம்பிக்கப்பட்டது.

## கிருஷி கல்யாண் அபியான்

- ❖ 2022ம் ஆண்டிற்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க வேண்டும் என்ற பிரதமரின் தொலைநோக்குப் பார்வையோடு பொருந்திப் போகும் வகையில் மத்திய விவசாய மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகம் 2018ம் ஆண்டு ஜூன் 1 முதல்

ஜூலை 31 வரையில் கிருஷி கல்யாண் அபியான் என்ற திட்டத்தை துவக்கியுள்ளது.

- இந்த திட்டத்தின் நோக்கம் எவ்வாறு விவசாயிகள் தங்கள் வருமானத்தை அதிகப்படுத்துவதற்காக அவர்களது விவசாய தொழில்நுட்பங்களை மேம்படுத்த வேண்டுவதற்காக உதவி செய்யவும், துணை புரியவும் ஆலோசனை கூறவும் எண்ணும் திட்டமாகும்.
- உயர் லட்சிய மாவட்டங்கள் (Aspirational Districts) ஒவ்வொன்றிலும் 1000 பேர்களுக்கும் அதிகமாக உள்ள 25 கிராமங்களில் கிருஷி கல்யாண் திட்டம் அமல்படுத்தப்படும். இந்த கிராமங்கள் நிதி ஆயோக்கின் ஆலோசனையின் பேரில் மத்திய ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் ஆலோசனையுடன் அடையாளம் காணப்படும்.
- இந்த மாவட்டங்களில் 1000 பேர்களுக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட ஆனால் 25 என்ற எண்ணிக்கைக்கும் குறைவாக கிராமங்கள் இருக்கும் சமயத்தில் அனைத்து கிராமங்களும் இத்திட்டத்தில் இணைக்கப்படும்.
- விவசாய அறிவியல் மையங்கள் என்று அழைக்கப்படும் கிருஷி விக்யான் கேந்திராக்கள் இத்திட்டத்தை ஒருங்கிணைந்து நிறைவேற்றிடும்.

## இரண்டாவது தேசிய சுகாதார ஆசிரியர்கள் மாநாடு

- தனிப் பொறுப்புடன் கூடிய ஆயுஷ் துறையின் இணை மந்திரி ஸ்ரீபத் எசோ நாயக், புதுதில்லியில் தேசிய ஊடக மையத்தில் 2வது தேசிய சுகாதார ஆசிரியர்கள் (2nd National Health Editors Conference) மாநாட்டை துவக்கி வைத்தார்.
- இந்த மாநாடு
    - பத்திரிக்கை தகவல் அலுவலகத்துடன் (Press Information Bureau - PIB) இணைந்து மத்திய ஆயுஷ் அமைச்சகம்
    - மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம்
    - யோகா மற்றும் இயற்கை மருத்துவத்திற்கான மத்திய ஆராய்ச்சிக் குழு

  ஆகியவற்றால் இணைந்து 2018ம் ஆண்டு ஜூன் 21 அன்று நடத்தப்படும் 3வது சர்வதேச யோகா தினக் கொண்டாடங்களின் ஒரு பகுதியாக நடத்தப்படுகிறது.
- இந்த வருடத்திற்கான மாநாட்டின் கருத்துரு சுகாதாரத்திற்கும் நல்லிணக்கத்திற்கும் யோகா எனப்படுவதாகும்.
- 2016ம் ஆண்டு பத்திரிக்கை தகவல் அலுவலகத்தாலும் மத்திய ஆயுஷ் அமைச்சகத்தாலும் இணைந்து முதல் தேசிய சுகாதார ஆசிரியர்கள் மாநாடு நடத்தப்பட்டது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## மின்னணு கழிவு உற்பத்தி

- அசோசாம் NEC (ASSOCHAM-NEC) என்ற நிறுவனத்தின் சமீபத்திய அறிக்கையின் படி உலகின் ஐந்து முன்னணி மின்னணு கழிவுகளை ஏற்படுத்தும் நாடுகளில் (e-Waste Generation) இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- இந்தப் பட்டியலில் உள்ள பிற நாடுகள் சீனா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஜெர்மனி

ஆகியனவாகும்.

- இந்த ஆய்வறிக்கை உலக சுற்றுச்சூழல் தினமான ஜூன் 5ம் தேதியுடன் (World Environment Day) ஒத்திப் போகும் வகையில் வெளியிடப்பட்டது.
- இந்தியாவில் மகாராஷ்டிர மாநிலம் 19.8 சதவிகிதம் என்ற அளவிற்கு மிகப் பெரிய மின்னணு கழிவுகளை தோற்றுவித்தாலும் வருடத்திற்கு 47,810 டன்கள் என்ற அளவிற்கு மட்டுமே அவற்றை மறுசுழற்சி செய்கின்றது.
- அதே சமயம் அதற்கு எதிராக தமிழ்நாடு 52,427 டன்களும் (13 சதவிகிதம்) உத்தரப்பிரதேசம் 86,130 டன்களும் (10.1 சதவிகிதம்) மறு சுழற்சி செய்கின்றன.

- - - - - - - - - - - - - - -